# சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**இடர்முகாமைத்துவக் கால சுயகற்றல் செயலட்டை – 2021**

**பாட இணைச் செயற்பாடு (தரம் - 04)**

காலம் : 2021.05.31 – 2021.06.06

தயாரிப்பு : C.ரூபி ஜசிந்தா (ஆசிரிய ஆலோசகர்)
தெஹியோவிற்ற வலயம்

**செயலட்டை இல : 05**

- **இப்பாடலை நீர் விரும்பிய தாளத்துடன் பாடுக.**

**தவளைக்கூத்து**

டும் டும் மழை மழை டும் டும்
கும் கும் தவளைகள் கும் கும்
சல்லரி நான்கு மத்தளம் ஏழு தவிலும்
சேர்ந்தே டும் டும் டும்
மெல்லென வீங்கும் புல்லாங்குழலும்
வீணையும் சேர்ந்தே டும் டும் டும்

(டும் டும் டும் மழை…)

குப்பை நிறைந்திடும் பள்ளத்திலே
ஒரு கூட்டம் நடக்குது தை தை தை
செப்பு நெருஞ்சியும் வட்டத்தகரையும்
சீலை விரிக்குது நை நை நை

(டும் டும் டும் மழை…)

பச்சத்தேரை பிடில் வாசிக்க
பனிமரைத் தேரை குழலூத
மொத்தத்தவளை நாட்டியமாட
மா சங்கு கேட்குது ஞொய் ஞொய் ஞொய்

(டும் டும் டும் மழை…)

கொட்டும் மழையும் தாளம் போட
குளிரும் காற்றும் கவிபாட
கொட்டாந் தரையில் தவளைகள்
சேர்ந்து போடுது கூத்து தை தை தை

(டும் டும் டும் மழை…)